


# கோபியின் நினைவலைகள்
## 12.03.2006



உ
சிவமயம்

தென்மராட்சி சாவகச்சேரி
கச்சாய் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரு
திரு.திருமதி பேரம்பலம் சந்திரகாயன் அவர்களின் ஆருயிர்ப் புதல்வனும்,
மீசாலை கண்ணன் களஞ்சிய உரிமையாளருமான

# செல்வன் - ச. விஜயதர்சன் (கோபி) அவர்களின்

சிவபதப்பேறு குறித்த 49 வது தின

# நினைவுமலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

கண்ணின் மணியாக கருத்தில் ஒன்றாக

மண்ணில் எமக்காக வாழ்ந்திட்ட கோபியே!

பெற்றோர்க்குப் பெருமை தந்து உற்றார்க்கு உதவி செய்து

காற்றாகப் போனவனே! காவியத்தின் நாயகனே!


சோதரின் சொத்தாக விளைந்த நல் முத்தாக

ஆதவன் போல் நின்றவனே உனக்கிது எம்

சமர்ப்பணமாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோத்திரப் பாக்கள்



## விநாயகர் துதி

திருவாக்கும் செய்கருமம் கை கூட்டும் - செஞ்சொல்
பெருவாக்கும் வீடும் பெருக்கும்
உருவாக்கும் ஆதலினால் வானோரும்
ஆனைமுகத்தானைக் கூப்புவர்கை.

## தேவாரம்

மங்கையற் கரசி வளவர் கோன் பாவை
வரிவளைக் கைமடமானி
பங்கையற் செல்வி பாண்டிமாதேவி
பணிசெய்து நாள் தோறும் பரவ
பொங்கழலுருவன் வேதநாயகன் பால்
வேதமும் பொருள்களுமருளி
அங்கயற்கண்ணி தன்னொடுமமர்ந்த
ஆலவாயாவது மிதுவே

## திருவாசகம்

வான நாடரும் அறியொணாத நீ
மறையிலீறுமுன் தொடரொணாத நீ
ஞான நாடரும் தெரியொணாத நீ
என்னை இனிதாயாண்டு கொண்டவா
ஊன நாடகம் ஆடுவித்தவா
நைய வையத்துடைய விச்சையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

புவனநாயகனே யகவுயிர்க்கமுதே
பூரணா வாரணம் பொழியும்
பவளவாய் மணியே பணி செய்வார்க் கிரங்கும்
பசுபதி பன்னகா பரணா
ஆவணி ஞாயிறு போன்றருள் புரிந்தடியே
னகத்திலு முகந்தலை முதூர்த்
தவளமாமணிப் பூங்கோயிலுமமர்ந்தாய்
தனியனேன் தனிமை நீங்குதற்கே

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின் கண் மெய்யடியார்கள்
விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடியீசற்காட்
செய்மின் குழாம் புகுத்
தண்டங்கடந்த பொருளைவில்லதோ
ரானந்த வெள்ளப் பொருள்
பண்டு மின்று மென்றுமுள்ள பொருளென்றே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

அண்ணலே யெனை யாண்டு கொண்டருளியவமுதே
விண்ணிலே மறைந்தருள் பரிவேத நாயகனே
கண்ணிறைந்திருக் கயிலையிலிருந்த நின்கோலம்
நண்ணி நான் தொழ நயந்தருள் புரியெனப் பணிந்தார்

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள் சற்குருவாகி
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனே சற்குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

## கடவுள் வாழ்த்து

வான்முகில் வளாது பெய்க மலிவளஞ் சுரக்கமன்னன்
கோன் முறையரசு செய்கக் குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான் மறையறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள்சைவ நீதிவிளங்குக உலகமெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை வடிவம்

(ஆசிரியப்பா)

மாவும் பலாவும் பயன் தருநற் கொடிகளும்
தாவும் தளிர் மிகு தண் மலர்ச் செடிகளும்
மாவடியானின் அருள் மிகு கோட்டமும்
சேவடிய்வனைத் தொழும் பக்தர் கூட்டமும்
நற்றதமிழ் சைவர்கள் நாவலர் வதியும்
பற்பலமிழ் அறிஞர்கள் ஆன்றோர் பதியாம்
மாசாலை என்னும் மா புகழ் கண் ட
மீசாலை என்னும் மிகப்பேர் கொண்ட

ஊரதில் உத்தமனாகவே அன்று
பேரம்பலமெனும் பெருமகன் நின்று
இராச குமாரியாம் இராசம்மாவுடன்
நேசவாழ்வில் நிம்மதி நிறைவுடன்
இல்லறமியற்றிட இறைவனின் அருளால்
நல்லழகெழிலுடன் நாதனின் அருளால்
சந்திரன் அழகுடன் சற்புத்திரனாம்
சந்திரகாயன் மலர்ந்தான் புத்திரன்

திருமண வயதினைக் கண்டதும் பெற்றோர்
மருமகள் ஆசையை அடைந்திடப் பெற்றோர்
சாவகச்சேரியைச் சார்ந்த அம்மகள்
நாமகள் எழிலினைக் கொண்டதோர் மகள்
செல்லத்துரையுடன் நல்லம்மாவும்
இல்லறமியற்றிட இகந்தினிற் பிறந்தவள்
சிவனுடை புத்திரி சீலத்தின் நாயகி
சிவயோகமெனும் சீரிய நாயகி
மணமகளாய் வர சந்திரகாயன்
மனமது மகிழ மணவறை தனிலே
அம்மிமிதித்து அருந்ததி பார்த்து
கும்பிடும் முருகனை நம்பியே சேர்த்து
ஆன்றோர் அறிஞரின் ஆசிகள் வாங்கி
சான்றோர் சாட்சியில் மணமதைத் தாங்கி
இணைந்தனர் இல்லற வாழ்வினிலாங்கே
நனைந்தனர் நல்லறவாழ்வியலிற் பாங்கே

இல்லறவண்டியும் இனிதாய் ஓடிட
நல்லறப் பயன்களும் நன்மையாய் நாடிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜயகாந்தன் வியத்தகு எழிலுடன்
ஜெயமுடன் உதிக்கப் பெற்றவர் களிப்புடன்
காத்தனர் அவனைக் கண்ணின் மணியாய்
மூத்த நல்முத்தென எண்ணினர் கனிவாய்
மீண்டும் ஓர் மகன் அன்னவர்க் காங்கே
ஆண்டுகள் கழிந்திடக் களிப்புடன் பாங்கே
விஜயரூபன் என நாமும் சூட்டி
விஜயனாக வளர்த்தனர் ஊட்டி
காலம் ஓடிடக் களிப்புடன் மீண்டும்
பாலகன் உதித்தான் உலகினில் ஈண்டும்
அஸ்திக் கடனுக்கோ மூன்று ஆண்மக்கள்
ஆஸ்தி கொடுத்திட இல்லையே பெண்மகள்
எண்ணி ஏங்கி இப்படித்தவிக்க
புண்ணியப் பயனால் மகளவதரிக்க
விதுரா என்னும் விளங்கிடும் பெயருடன்
மதுரமாக மலந்தாள் நற்பெயருடன்
இப்படிப் புத்திரர் வாழ்வதும் கொழிக்க
எப்படியோ அவர் கல்வியும் செழிக்க

மாயவக் கடவுளின் அருளினைத் தினமும்
தாயவள் வேண்டினாள் அன்புடன் அனுதினம்
மக்களின் பெயர்களை மாயவக் கடவுளின்
தக்க நல் பெயர்களின் கண்ணன், திருமால்
வல்லவன் அருளுடன் கோபி என்றும்
செல்லப் பெயர்களில் அழைத்தனர் என்றும்,
சிவந்தநல் மேனியைக் கோபி கொண்டவன்
உயர்ந்த தோற்றத்தை இளையவன் கொண்டனன்
அன்னவன் தான் இன்று எங்களின் நாயகன்
அவனுடைய கதையினை அனைவருமறிய
அவனுடைய மகிமையை மற்றவர் புரிய
ஏற்றிடும் இதனை இனிமையாய் இன்று
போற்றிடும் அவனைப் புகழுடன் நின்று

ஆரம்பக் கல்வியை அயலுடை பள்ளியாம்
பேரது பெற்ற பெரும் புகழ்ப் பள்ளியாம்,
"விக்னேஸ்வராவில் விருப்புடன் கற்றனன்
விக்கினமின்றி நற்கலை பெற்றனன்,
கல்வியில் ஊக்கமும் காண்பவர் புகழ
சொல்லிய அனைத்திலும் அதிகமாய்த் திகழ
பங்க மின்றிப் பலகலை கற்றிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கத்தானையில் பெருங்கலை பெற்றிட
சென்றவன் அங்கே உயர் கல்வி பெற்றான்
வென்றவன் அனைத்திலும் அதிகமாய்க் கற்றான்
படிப்பினிற் கோபி பாங்குடன் பறந்தான்
துடிப்புடன் பலப்பல கலைகளிற் சிறந்தான்
காலம் கரைந்திடக் காலமும் மாறிட
கோலம் கொண்டது கோபியும் மாறிட
படித்தது போதும் என்று என எண்ணி
பிடித்ததோர் உழைப்பினை உவகையாய் நண்ணி
கடையினை அமைந்து கனமுடன் நிலைத்து
கடமையிற் கண்ணாய் கருத்துடன் உழைத்து
அண்ணனுக் குதவியாய் அகமகிழ்ந்தவனே
திண்ணமாய் நின்று திறமுடன் அவனே
சோதரர் அவர்க்கு ஆதவன் போல் நின்று
ஆதரவானான் அனைத்தையுமே வென்று

நகமும் சதையும் போல் நல்லன்புச் சோதரர்
இகமே புகழ்பாடும் நல்லன்புச் சோதரர்
பாண்டவர் மீண்டும் பாரினிற் பிறந்தரோ
ஆண்டவன் அருளோ? எந்துணை சிறந்தரோ?
இராமனின் சோதரர் இலக்கிய நாயகன்
ஊரது இப்படிப் பேசிடத் தூயவர்
உழைத்தவன் கோபி உயர்த்திய ஏணி
சளைத்திடா நிற்கும் அன்னவன் பாணி
பெற்றவர் மகிழப் பெருமையிற் திகழ
மற்றவர் உற்றவர் மதிப்பாய்ப் புகழ
காத்திரமாயவன் காசினி போற்ற
கோத்திரமவனதைக் குவலயம் ஏற்ற
கொற்றவன் கோபி வாழ்ந்த
அக்காலம்
மற்றவர் வியக்கும் மண்ணின் பொற்காலம்

சிங்கார முகமதில் சிரிப்பென்றும் மாறா
மங்காது மலர்ச்சி கோபமே ஏறா
களங்கமிலா மனம் கலகல பேச்சு
விளங்கிடும் அவன் மனம் கருணையின் மூச்சு
கண்களிற் கனிவு கருத்தினிற் செறிவு
திண்ணமாய் திட்டம் தீட்டிடும் அறிவு
அன்புடன் நண்பரை அரவணைப்பதுவும்
பண்புடன் அன்னவர்க்குதவிடும் வகையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லில் அடங்கா சொல்லி முடியா
வல்லவன் வல்லமை வார்த்தையில் முடியா

இப்படியே கோபி வாழ்வும் ஓடிட
எப்படியோ கொடும் விதியும் நாடிட
மோட்டார் சைக்கிளில் மோகனமாய்ச் சென்று
வீட்டார்க்கு வேண்டிய காய்கறி கொண்டு
போகவே எண்ணிச் சந்தைக் கேகிட
ஆகின ஐயோ ! அவன் கதை சோகமாய்
பாதகர் பார்வை பட்டெனப் பட்டிட
காதகர் கர்வமாய்க் கோபியைச் சுட்டிட
வெடியது கேட்டது வேதனைக் குரலுடன்
துடிதுடித்தாங்கே வீழ்ந்தனன் வெறுமுடலுடன்
குண்டுகள் துளைத்ததால் குருதியும் வழிந்திட
குண்டரின் கொடுமையால் அவனுயிர் அழிந்திட
கோபியின் கதையே முடிந்தது ஒழிந்தது
கோபியின் பெயரும் அனைத்தும் அழிந்தது
சோக இச்சம்பவம் கேள்விப் பட்டிட
வேகமாகச் சென்று திருமாலெனும் சோதரன்
தம்பியைத் தூக்கித்தன்னுடல் சோர்த்திட
நம்பியே துணிவாய் வீட்டிலே சேர்த்திட
அவனியே அழுதது அவலமாய் போனது
இவனது கெதியென எண்ணவே ஆனது
பெட்டியிற் பயணம் போயினான் கோபி !
முட்டிய கண்ணீரே அனைவர்க்கும் கோபி!
விண்ணாளப் போயினான் எங்களின் கோபி
மண்ணாசை மறந்து மறைந்தனன் கோபி
உலக உத்தமர் மகாத்மா காந்தியும்
உலக ரட்சகர் யேசு நாதரும்
புல்லவர்கரைந்தான் புவியினை நீத்தார்.
நல்லவர் வாழ்வு இப்படித் தானோ!
மரணம் வந்திட மறுத்திட முடியுமா
தருணம் வந்திடத் தப்பவும் முடியுமா
விதியே இதுவென வேகமாய் வந்ததால்
கெதியே இதுவென ஆறு தல் கொள்வோம்
அன்னதையுணர்ந்து அவ்வாத்மா சாந்தியுற
பொன்னடி முருகன் தாள் போற்றி நிற்போமே!

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேற்றம்

ஆண்டாண்டு தோறுமழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ மாநிலத்தீர் வேண்டா
நமக்குமது விதியே நாம் போமளவும்
எமக் கென்றெட்டுண்டிரும்

## பெற்ற வயிறு பேதலித்தழும் குரல்

பத்துத் திங்கள் சுமந்து நான் ஈன்றெடுத்த என்னுயிரே!
பாதி வழிதனிலே பரமனிடம் போயினையோ!
முத்து மகனே ஐயா! முழு நிலவே இன்னுயிரே!
முழுவாழ்வு முடியாது முரு கனிடம் போயினையோ!
சொத்து நீ எமக்கென்று எண்ணியே நாமிருக்க
சோதனைக் காளாக்கிப் போயினையோ! போயினையோ
பித்துப் பிடிக்குதடா பெற்றவனே உனை நினைக்க '
சித்தம் கலங்கவைத்துச் சிவலோகம் போயினையோ?
அம்மா! என அழைக்கும் உன் அன்புக் குரல் எங்கே!
ஆதரவாய் அரவணைக்கும் ஆறு தல் மொழி எங்கே!
சும்மா நீபேசும் வேடிக்கைப் பேச்செங்கே!
சுறுசுறுப்பாய் உழைத்திட்ட உன்னுழைப்பு மினி யெங்கே!
இம்மாநிலத்தில் உன்வதனம் காண்போமா இனி இங்கே!
ஈன்றவள் நான் இகத்திளிலே இனி வாழ வழி எங்கே !
எம்மால் முடியவில்லை எம்கோபிநீ எங்கே!
ஏது வழி தெரியவில்லை என் செய்வோம் நாமிங்கே!

அப்பா கதறியழ அண்ணன் மார் கதறியழ
அயலவர்கள் அனைவருமே ஆற்றாது தேம்பியழ
செப்பாது போயினையோ நாமிங்கே சேர்ந்து அழ
செல்லத்தங்கையவள் துடிதுடித்துத் தானுமழ
பெட்டியிலே போயினையோ! பெட்டகமே என்மகனே!
பெற்றவயிறைய் யோ கொதிக்குதடா என்மகனே!
மட்டில்லாத்துயரமடா கோபியே என்மகனே!
மண்புழுவாய்த்துடிக்கின்றேன் மாயவனே என் மகனே
தேடிஒரு மணமகளைத் தேர்ந்தெடுத்து உந்தனுக்கு
தெத்தம் பண்ணிவைத்து எம் கடமை முடிப்பதற்குள்
கூடி நின்று நாமெல்லோம் குதூகலித்து உந்தனுக்கு
குளிர்ந்திடக்கண் கல்யாணக் கடமையினை முடிப்பதற்குள்
அறுகரிசி போட்டு நாம் ஆசீர்வதிப்பதற்குள்
அவசரமாய்ப் போனாயே என்ராசா! என்கோபி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுகரிசி போட முன்பு அவசரமேன் வந்ததைய்யா,
வாய்க்கரிசி போட வென்று வாழ்வுமே வந்ததைய்யோ
மறுபிறப்பு என்று ஒன்று மண்ணதிலே இருக்குமென்றால்
மாயவனே என்னுயிரே மகனாயே வந்துவிடு
மறுபிறப்பு வரும் வரைக்கும் மறந்திருக்க முடியவில்லை
மறுக்காமல் மறக்காமல் கோபியே நீ வந்துவிடு

## தந்தையின் தவிப்புக் குரல்

செல்லமகன் என்று நீ செருக்குடனே வாழவில்லை
செல்வம் சீர் சிறப்பைத் தேடாமலிருக்கவில்லை
பெற்றோரைப் பேணி நல்ல பெருமை பெறத்தவறவில்லை
உற்றவரை உபசரித்து உதவி செய்யத் தவறவில்லை
சோதரரை அரவணைத்து ஆதரிக்கத் தவறவில்லை
பாதகமாய்ப் பாரினிலே பரிகசிக்க வாழ வில்லை
ஊருக்கு நல்லவனாய் உதவி செய்யும்சேவகனாய்
யாருக்கும் தீங்கில்லாத் தீந்தமிழின் நாயகனாய்
வாழ்ந்திட்ட உன் மீது வஞ்னை கொண்டாரோ?
பாழ்பட்டுப் போனவர்கள் என்ன பயன் கண்டாரோ!
உழைத்து உழைத்து எம்மை நீயே உயர்த்திவைத்தாய்
சளைக்காது உழைத்து எம்மைச் சபையினிலே ஏற்றிவைத்தாய்
நல்லவனாய் ஈன்றுன்னை நானிலமே போற்ற வைத்து
வல்லவனாக உன்னை வளமுடனே வாழவைத்து
அள்ளி அமுதூட்டி அரவணைத்த என்கையாலே
கொள்ளிவைத்தேன் நானுனக்கு கொடும்பாவி ஆனேன் நான்.

## அண்ணன் விஜயகாந்தனின் (கண்ணன்) அவலக்குரல்

அண்ணனுக்குத் தம்பிகள் அகிலத்தில் இருப்பதுண்டு
மன்னனுக்கு மந்திரிகள் மண்ணிலே இருப்பதுண்டு
கோபி! நீ எந்தனுக்குத் தம்பியா! மந்திரியா!
கோபி! நீ எந்தனுக்குக் குரு வா இல்லைத் தந்திரியா!
இராமனுக்குத் தம்பியாக இருந்தான் அக்காலத்தில்
நீ எனக்குத் தம்பியாக இருந்தாய் இக்காலத்தில்
உயிரதிலே நீபாதி உழைப்பினிலும் நீ பாதி
உயர்வதிலும் நீ பாதி உணர்வினிலும் நீ பாதி
அண்ணா என அழைத்தால் அமிர்தமே வாயூறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணா என அழைத்தாலும் அமிர்தமே கட்டாயம் நீரூறும்
விருப்பு உனதின்றி எதைச் செய்தேன் என் வாழ்வில்
வெறுப்பு உனக்கென்றால் செய்வேனோ அதை வாழ்வில்
உனக்குப் பிடித்தாற் தான் எனக்கும் பிடிக்குமடா
எனக்குப் பிடித்தது தான் உனக்கும் பிடிக்குமடா
கோபி நீ போய்விட்டாய் குற்றுயிர் குலை உயிரானேன்
கோபி நீ போன பின்பு நீரில்லாப் பயிர் ஆனேன் .
அன்னை தந்தையினை ஆற்றிடவோ முடியவில்லை
பின்னை எந்தன் தம்பி தங்கை தேற்றிடவோ முடியவில்லை
ஊணம் பிடிக்குதில்லை உறக்கமும் வருகுதில்லை
தேனும் சுவைக்கவில்லை தேடிவரமுடியவில்லை
தம்பி என் தம்பியெடா தங்கக் கம்பியெடா
நம்பி நின்ற என் கெதியோ நரகமாய் ஆனதடா
கோபியே! நீயின்றி எல்லாமே போச்சுதைய்யோ
கோபியே என் தம்பி சூனியமாய் ஆச்சுதைய்யோ

செழிப்புடனே நாம் வாழ்ந்து, சீருடனே இருக்கையிலே
களிப்புடனே நாம் வாழக் காண்பவர் வியக்கையிலே
யார் கண்பட்டதடா நாசமற எம் வாழ்வு
யார் செய்த பாவமடா போனதுவோ எம் வாழ்வு
துப்பாக்கிக் குண்டுகளால் தூயவனே நீ போக
துர்ப்பாக்கிய சாலிகளாய் நாமிங்கே இனிஆக
யாரிடத்தில் சொல்லியழ எங்களது வேதனையை
யாரிடத்தில் நாம் சொல்ல எங்களது சோதனையை
மாயவனின் பெயர் பூண்ட மாயவனே கோபி நீ
மாயவனின் அருள் பெற்று சாந்தி பெற வேண்டுகின்றேன்
இன்னுமொரு முறை நீ இவ்வுலகம் வந்திடடா!
சின்னவனே தம்பி நீ தம்பியாய் வந்திடடா!

## அண்ணன் விஜயரூபன் (திருமால்)
## ஆற்றாமைக் கண்ணீர்

அன்னையின் வயிற்றினிலே அவதரித்த அருமுத்தே
அக்கல்விளக்காய் அனைவர்க்கும் ஒளிகொடுத்த எம்சொத்தே
பின்னை எனக்கடுத்துப் பிறந்ததொரு நல்வித்தே
பிறர்க்காக வாழ்ந்ததொரு பிரிய எந்தன் அருமொட்டே
ஒரு கூட்டில் நாம் பிறந்து ஒன்றாக நாம் வளர்ந்து
ஒருமித்து நாம் கலந்து ஒற்றுமையாய் நாம் மகிழ்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தட்டில் சோறுண்டு ஒரு பாயில் நாமுறங்கி
ஒரு கூட்டுப் பறவைகளாய் ஒற்றுமையாய் நாம் சிறந்து
ஊருக்கு உதாரணமாய் சோதரர் நாம் மூன்றிருக்க
ஊறு தான் வந்ததோடா சோகதரனே சேர்ந்திருக்க
யாருக்குத் தீங்கிழைத்தோம் யார் குடியை நாம் கெடுத்தோம்!
ஞாலத்தில் இத்துன்பமதை யார்க்கு நாம் எடுத்துரைக்க!
மணக்கோலம் காண்பதற்கு கனவு நான் கண்டிடவே
கணப்பொழுதில் உம்முயிர் தான் சாய்ந்ததுவோ சோதரனே
பிணக்கோலம் கொண்டீரே! பிடிசாம்பர் ஆனீரே
புவிவாழ்வு வெறுத்து நீர் புது உலகம் போனீரே!
பாசத்திருவிளக்கே பாங்கான எம் குல விளக்கே
பரமனிடம் போன எந்தன் சோதரனே கோபியே நீ
நேச நெடுமரமே நேர்மைமிகு ஒளி விளக்கே
நெஞ்சு வெடிக்குதடா உனை நினைக்கக் கோபியே நீ
சதியோ! இது விதியோ! சண்முகனே தான்றிவான்
செகத்தினிலே இது விதியோ! சண்டாளர் தானறிவர்
அதி அன்பு கொண்டுன்னை அஞ்சலிக்கும் அண்ணனடா
திருமால்நான் அஞ்சலித்தேன் அமைதிபெற

## ஆருயிர்த் தங்கை விதுராவின் ஆற்றாமைக் கண்ணீர்

முன்னம் பிறந்தவனே! முத்தழகே என் அண்ணா!
கன்னம் குழிவிழ நீ சிரிக்காயோ சொல் அண்ணா!
தங்கச்சி என்று வந்து தழுவாயோ ஏன் அண்ணா!
தங்கத் திரு விளக்காய் ஒளிராயோ என் அண்ணா!
மணவறையில் மணமகனாய் வாராயோ வாராயோ சின்னண்ணா!
மணம் செய்து மைத்துனியைக் காட்டாயோ கோபி அண்ணா!
புதுச்சட்டை புதுநகைகள் வேண்டாமே என் அண்ணா!
புதுப்பண்டம் ரொபி கடலை வேண்டாம் என் சின்னண்ணா!
கலகலப்பாய் கதைபலவும் சொல்லாயோ என் அண்ணா!
பலப்பல பகிடிகளும் பகிராயோ கோபி அண்ணா!
மோட்டார் சைக்கிளில் நீ வருவதைப் பார்த்திருக்க
வீட்டாருடன் சேர்ந்து வீதியை நாம் நோக்கி நிற்க
எங்கே நீ போனாய் எந்தனுயிர்க் கோபி அண்ணா!
இங்கே நான் வாடியழ எங்கே நீகோபி அண்ணா!
அண்ணா நீவரமாட்டாய் அயருலகம் போயினையாம்
விண்ணாளப் போயினையாம் விரைந்து போயினையாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குண்டுகள் உடல் துளைக்கக் குருதியும் வழிந்தோட
கொண்டு வந்தாரிங்கே உன் உயிரே பிரிந்தோட
உயிரற்று உடல் சரிந்து நீ வந்தாய் என் அண்ணா
கயிறற்ற பட்டம் போல் தவிக்கின்றேன் நான் அண்ணா
நன்றாகப் படிக்கவைத்து நன்றாக வாழவைக்க
நீ கண்ட கனவெல்லாம் விலாச்சு வீண் ஆச்சு
நீ கொண்ட ஆசை யெலாம் கானல் நீராய்ப் போச்சு
படித்து இனி என்னபயன் பட்டமதால் என்னபயன்
முடித்து விட்டாய் உன் வாழ்வு வாழ்வில் இனி என்ன பயன்!
ஆசை அண்ணா கோபி அண்ணா அன்புக்குட்டி அண்ணா
ஆசைத் தங்கை ஆசையினைக் கேளாயோ என் அண்ணா
உந்தன் எழில் பார்ப்பதற்கு உந்தன் மொழி கேட்பதற்கு
உந்தன் தங்கை படும் ஆவலினைத் தீர்ப்பதற்கு
சொர்ப்பனத்தில் என்றாலும் சோதரிக்காய் வந்துவிடு
சொர்க்கமே எனக்கது தான் சோதரனே வந்துவிடு
காத்திருப்பேன் பார்த்திருப்பேன் கடுகதியில் வந்துவிடு
கட்டாயம் கோபி அண்ணா கனவினிலே வந்துவிடு

## அப்பம்மாவின் அழுகைக் குரல்

பட்டமரம் நானின்னும் பாரினிலே வாழ
விட்டனையோ நீ உயிரை கோபியேவிண் ஆள
காவோலை நானின்னும் காசினியில் வாழ்ந்து கொள்ள
சாவோலை வந்த தேரடா உன்னுயிரைக் காவு கொள்ள
கண்ணான என் பேரா! கலிகாலம் இது தானோ!
சண்டாளர் சதியினிலே போனதுமோர் விதி தானோ!
நெஞ்சம் கொதிக்குதடா நேசனே என்துரையே !
சஞ்சலம் தாங்கவில்லை சற்குணனே என் துரையே!
விண்ணுலகம் சென்றவனே! அங்கு நல் இடம் தேடி
கண்ணே நீ வைத்திடடா நான் வருவேன் ஓடோடி
அப்பம்மா நான் வந்திட்டால் ஐயா நான் உன்னோடு
அதப்பாமல் வாழ்ந்திடுவேன் மகிழ்வுடனே உன்னோடு
கோபியே! என் ஆவி; கொற்றவனே என் பேரா
சாமியே சரணமென்று சாந்தி கொண்டு வாழ் சீராய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்தப்பா, சித்திமார் உடன் பிறவாச் சகோதரர்களின் உள்ளக்குமுறல்கள்

காகம் கரையவில்லை கனவுகளோ ஏது மில்லை
சாரும் வயதினிலே எங்களுக்கு யாருமில்லை
ஆந்தை அலறவில்லை ஆனை உளறவில்லை
கூந்தல் கலையவில்லை கூற்றுவனைக் காணவில்லை
காலம் கலி ஆச்சு தைய்யோகாரணமோ புரியவில்லை
ஞாலத்தில் நல்லவர்கள் வாழ்வதில்லை வாழ்வதில்லை
நல்லவன் கோபி என நீ பெயர் பெற்றதால் தானோ?
வல்லவன் நீயென்று ஊர் சொன்னதாற் தானோ?
புல்லர்கள் பூசர்கள் பூமியிலே இன்னும் வாழ
நல்ல எம்கோபியே! நீ போனாய்விண் ஆள
பொல்லாத உலகமடா போக்கிரிகள் கூட்டமடா
செல்லாது நல்ல குணம் போட்டிடுவர் ஆட்டமடா
அன்னதையுணர்ந்து நான் அவசரமாய்ப் போயினையோ!
சின்னவா எம்மகனே! சிவனுடனே ஆயினையோ!
போய்வாடா போய்வாடா பொன்மனமே எம் கோபி!
வாய்விட்டு அஞ்சலித்தோம் சித்தப்பாசித்திகள் நாம்

## மாமா மாமி மைத்துன மைத்துனிகளின் மனச் சஞ்சலம்

மாசற்ற மருமகனே மாந்தரில் மணிவிளக்கே
நேசமுடை மருமகனே நேரிய எம்திரு விளக்கே
சோதரியின் சுந்தரனே சோதியனே கோபியனே!
ஆதரித்து எமை யெலாம் அரவணைத்த கோமகனே
சிரித்த உன் முகமெங்கே சிங்காரப் பேச்செங்கே
வரித்த உன்மனமெங்கே வனப்பான உடலெங்கே
சித்திரமே சீரியனே சீலனே நீ எங்கே!
நித்திலத்தில் தேடுகின்றோம் நிர்மலனே நீ எங்கே!
எமலோகம் சென்றீராம் எம்முறைவை நீர் விட்டு
அமருலகம் அமரவாழ்வு நீர் தொட்டு
சாந்தி பெறும் ஐயா, சாந்தமுடை எம் கோபி!
ஏந்தி நாம் தொழுவோம் சாந்திபெறு எம்கோபி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அண்ணி நர்மதாவின் அழுகைக் குரல்

அடிக்கொருக்கால் ஓடிவந்து ஆறுதலில் எமைத்திறைந்து
நொடிக்கொருக்'கால் நேசமுடன் அண்ணி என அழைத்து
அண்ணனின் குழந்தையை நீர் அன்புடனே தூக்கி வைத்து
கண்ணே மணியே என்று கட்டி முத்தம் கொடுத்து வைத்து
"கக்களிக்" கிண்டி நல்ல கலகலப்பாய் விளையாடி
நக்கல் நளினமுடன் "தஷாங்கி"! என விளையாடி
கன்டொஸ் ரொபிவகைகள் கடலை மிட்டாய் எனப் பலவும்
தின்னக் கொடுத்து விட்டு மகிழ்ச்சியுடன் நீர் குலவும்
காட்சியது கனவாச்சோ காலமது கலி ஆச்சோ!
மாட்சியது மண் ஆச்சோ! மண்ணோடு மண் ஆச்சோ!
மாசற்ற மைத்துனரே நேர்மை மிகு எம் கோபி!
அண்ணர் உம்பிரிவால் அவலப்படுவதினை
அன்னை உறக்கமின்றி உருக்குலைந்து போவதினை
உம்மன்பு மகளிங்கே உமை ஏங்கி அழைப்பதினை
எம்மன்புச் சித்தப்பா, என்று தினம் அழுவதினை
சகிக்கவோ முடியவில்லை சத்தியமாய் எங்களினால்
சுகிக்க முடியவில்லை உம்பிரிவால் எங்களினால்
சண்டாளர் சதியினாற் சடுதியில் நீர் போனதினால்
புண்ணாகிப்போனோமே இந்நிலைமை ஆனதினால்

இனி அழுது ஆவதென்ன ஆனை வாயிற் கரும்புதான்
இனிவருமோ அது எமக்கு நீர் இனிமேல் விண்ணகம்
பாம்பு வாய்தவளையது தப்பிப் பிழைத்திடுமோ
காம்பு மலர் வீழ்ந்த பின்பு விருட்சத்தில் சேர்ந்திடுமோ!
மாண்பவர்கள் மீண்டும் இங்கே மண்ணில் வரலாமோ!
ஆண்டவனின் விதியெதுவோ அது என்றும் மாறிடுமோ!
அதை உணர்ந்து உம் அண்ணி அஞ்சலித்தேன்
இதை எனது அஞ்சலியாய் ஏற்றிடுவீர் அஞ்சலித்தேன்

## சின்ன அண்ணி சுஜந்தினியின் சோகம்

பல்லுவிழக் கனவில்லை பார்த்திபன் முடிசரியவில்லை
வில்லும் உடையவில்லை வேறு துர்க்குறியுமில்லை
பாழ்ங்கிணறு இடியவில்லை பல்லியும் சொல்லவில்லை
சாவுச் செய்தி வருமென்று சத்தியமாய் எண்ணவில்லை
தொலைபேசி மணி அடிக்க ஓடிவந்து நான் எடுக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொலையுண்டான் கோபி என்னும் சங்கதியால் நான் துடிக்க
தாங்கவே முடியவில்லை தரணியினிலே இதை எண்ணி
ஏங்கியே வாழ்கின்றேன் மைத்துனரே உமை எண்ணி
அப்பாவியாய் வாழ்ந்த எம்மன்புக்கோபிக்கு
தூப்பாக்கி வெடிதானோ பரிசாச்சுக் கோபிக்கு
ஐயகோ! அந்தகோ! ஆண்டவனே காலமோ
ஐயைய்யோ! இது முறையோ இதுதானோ ஞாலமோ!
அண்ணனின் அண்ணியென அருகிலிருக்க முடியவில்லை
பண்ணிய பாவமோ நான் பாடையிலும் காணவில்லை
பாதகர்கள் பாவிகள் பாடையிலே போகும் காலம்
சாதமாய் வந்துவிடும் சண்முகனே சாந்திபெறும்
சாந்தி பெறும் சாந்திபெறும் சந்தோஷ வாழ்வு பெறும்
சாந்தியது நீர் பெறவே சாந்தி பல வேண்டி நிற்பேன்.

## பெறாமகள் தஷாங்கியின் ஏக்கக் குரல்

சித்தப்பா! சித்தப்பா! என் ஆசைச் சித்தப்பா!
பெத்தப்பா தேடுகின்றார் போன தெங்கே சித்தப்பா!
கடை திறக்கச் சென்றீரோ கன்டொஸ்சும் கொண்டுவர
வடை முறுக்கு மிக்சர் என்று எல்லாமே கொண்டு வர
"உம்மாண்டி" காட்டுதற்காய் ஓடி மறைந்தீரோ
சும்மா என்னை ஏய்ப்பதற்காய் மறைந்தீரோ
அப்பாவிடம் சொல்லி அடிவாங்கித் தருவேன் நான்
அப்பம்மாவிடம் சொல்லி அறைவாங்கித்தருவேன் நான்
ஒளித்தது போதுமே ஓடிவாயேன் சித்தப்பா!
மீசையது குத்தாமல் மிகவும் எனை வருத்தாமல்
ஆசையாய் ஓர் முத்தம் கன்னத்தில் தாராமல்
நீயிருந்தால் சித்தப்பா சினமேறி அழுதிடுவேன்
போயிருந்தால் எங்கேயும் வந்துவிடு சித்தப்பா,
காத்திருப்பேன் காத்திருப்பேன் கதவருகில் நான் நின்று
பார்த்திருப்பேன் வந்து விடு பம்பரமாய் நீ இன்று

## உற்றார் உறவினர் நண்பர்கள் அயலவர்களின் ஆதங்கம்


வானுக்கினி மதியில்லை வையகத்தில் நீதியில்லை
தேனுக்குச் சுவையில்லை தென்றலுக்குக் குளிர்ச்சியில்லை
மயிலுக்கினி ஆட்டமில்லை மாநிலத்தில் மகிழ்ச்சியில்லை
குயிலுக்குப் பாட்டில்லைக் கூடிவாழக் கோபியில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்கின்றதோ அது நன்றாகவே நடக்கின்றது
எது நடக்க இருக்கின்றதோ அதுவும்
நன்றாக நடக்கும்
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக அழுகின்றாய்?
எதை நீ கொண்டு வந்தாய்
அதை நீ இழப்பதற்கு
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டுள்ளது
எது இன்று உன்னுடையதோ அது
நாளை மற்றொருவருடையாதாகின்றது
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

-பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்-

NOBLE PRINTERS 103, PALALY ROAD, JAFFNA, 0773126748

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org